உ

# தமிழ்ப் பொழில்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்துத் திங்கள் வெளியீடு.

துணர்: க. குரோதன-கார்த்திகை. மலர்: அ.

உ

## முன்னுரைக் குறிப்பு.

திருவாளர் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள் இச்சங்கத்துப் பதினைன்காம் ஆண்டுவிழாத் தலைமை தாங்கிக் கூறிய முன்னுரை, தமிழ்மக்கள் ஒவ்வொருவரும் ஊன்றிப் படித்து வியந்து மகிழ்ந்து முன்னத்தகும் ஒரு முன் உரையே யாகும். அதனைப் படித்தகாலை எழுந்த வியப்பு, மகிழ்வு முதலாயினவே ஈங்குக் குறிப்புரை யெனுமொரு பெயருடன் வெளிப்படுகின்றன.

செட்டியாரவர்கள் தாம் கூறற்குரிய பொருள்களை யெல்லாம் வரம்பிட்டு முறைசெய்துகொண்டு, அவற்றை நிரம்பியகருத்துக்களும், இனிய சொல்லமைப்பும் உடையவாகி மிளிரும்சொற்றொடர்களால், திறம்பட எடுத்துரைத்து வருதல் முன்னுரை மொழிவார்க்கெல்லாம் நல்லியல் வகுத்துக் காட்டியது போன்றுளது. முன்னுரையின் முன்னுரையாகிய அவைடக்கத்திலேயே, அவர்கள் ஆற்றல் நன்கு வெளிப்படுகின்றது. என்னை? அவையடக்கமுடிபோ பொய்க்கூற்று: அதனைத்திறம்பெறக்கூறலாவது மிகு பொய்கூறல். செட்டியாரவர்கள் புரவலர், அமைச்சர் எனும் பெயர்கள் பெற்றிலரோனும், தனவணிக மரபினரது

இயற்கைச் செல்வப் பெருக்கினையும், தமிழ்நாடெலாம் அறிந்த மிகுபுலமையினையும் பெற்றிருந்தும், "புலவர், புரவலர், அமைச்சர், பொருளாளர் என்னுந்தகுதியில் ஒன்றேனும் வாய்க்கப் பெறாத யான் (1)" என்று கூறி, 'முழுப் பூசுணிக்காயைச் சோற்றில் மறைப்பார்' போன்றனர். அவையடக்கப் பொய்ந் நெறியில் இவர்களைப்போன்று தமது தேர்ச்சியைக் காட்டினாரை, காட்டுவாரை யாம் அறிந்ததுமில்லை; அறிவதுமில்லை. இது பற்றியன்றோ, இவர்கட்குக் கூறிய வரவேற்பினில், "உள்ளநிறை பெருஞ்செல்வத் தொருவனைப், ஒப்பில் புலம் உற்றோன் றனை— எள்ளரிய நன்னெறிகள் எடுத்துரைக்கும் நல்லமைச்சாய் இதனைக் காக்கும்—வள்ளன்மைப் புரவலனைப் வாய்ந்ததுணர்ந் தனைத் தேர்ந்தேம் மன்னு மொன்றும்—அல்லனலன் என்றுரைக்கும் அவையடக்கம் யார்கொள்வார்? அன்பின் வாழ்வே!" என்பதொரு செய்யுள் எழுந்தது. இனி, அவையடக்கம் ஒழிந்த ஏனைப் பொருள்கட்கெல்லாம் இன்றியமையாத சிறப்பினவாகிய உண்மைக்கூற்று, நடுநிலை, துணிபு முதலாய உயர்நலமணிகளெல்லாம் இடந்தொறும், இடந்தொறுங் கிடந்து மிளிர்தலை நம் அன்பர்கள் கண்டு மகிழ்வார்களாக. ஓரிடத்து (12) நம் செந்தமிழ்த் தெய்வமொழிக்கு இல்லாதனவும், வேண்டாதனவுமாகிய சிலவற்றைச் சிலர் கூறுகின்றனர் எனச்சுட்டி அதனை ஒவ்வாராயினர்: மற்றும், பிறர் மொழிக்கண் இல்லாதகுறைகளை ஏற்றியுரைப்பார் சிலர் உளரெனச்சுட்டி, அதனைப் பொறாராயினர்; சமயநிலையிலும், பிறரை இகழ்வாரைச் சுட்டி, போற்றாராயினர்; இளைஞர் சிலர் செயலை எடுத்துக்காட்டி, அவர்களை நல்லாற்றுப் படுத்த முயல்வாராயினர்; (13) பிறமொழிப் பயிற்சியில் பெருந்தகுதி யெய்தினரேனும் தமிழ்ப்புலம் முற்றாதார் தமிழ்ப் பெருநூல்களுக்குச் செய்யும் ஆராய்ச்சி, உரைமுதலாயின புரைபடும் எனும் உண்மையைத் தெரிப்பாராயினர்; தமது குலத்தினர், மடங்களின் தலைவர் முதலாய தமிழ்ப்பெருஞ்செல்வர்கள் தமிழ்மொழியை நன்கு பேணாமையை வெவ்வேறிடங்களிற் குறிப்பாராயினர்; தம்நாட்டுச் சங்கம், சபைகளின் உண்மை நிலையினை மொழிவாராயினர். இங்ஙனம், அவர்களாற் குறிக்கப் பெற்றாருட் சிலர், அவர்கள் அரிய நண்பர்களென யாம் அறிவேம். எனவே,

செட்டியாரவர்களின் நடுநிலை யுணர்ச்சிக்கு இவையன்றி வேறு சான்றும் வேண்டுங்கொல்? இங்ஙனம் நடுநிலையுணர்ச்சி முதலிய கொண்டு எடுத்துரைத்திருக்கும் உண்மைப்பொருள் வளங்களைப் பற்றிய நம் கருத்துக்களை ஆங்காங்குச் சிறிது சிறிது குறித்துச் செல்வாம்.

புலவரவர்கள் நமது தாய்மொழியின் சிறப்பினை எடுத்துரைக்குமிடத்து, இம்மொழியிலுள்ள தொல்காப்பியம் முதலிய தெய்வ நறுமண மலர்களினுள்ள பொருட்பேறுகளாம் தேனை வடித்திறக்கி வைத்துள்ள தமது செம்புல ஆற்றல் வெளிப்பட, அவ்வந்நூல்களின் பெருமைகளை யெடுத்துரைத்துச் செல்லும் செவ்வி (3–12) உற்றுணரத்தக்கது. நூலின் பெருமை கூறுவான்புக்கு, இத்துணை இயலுடைத்து, இத்துணைத் தாளுடைத்து, இச்செய்யுள் இவ்வறம் கூறிற்று என்பனவெல்லாம் கூறியமையாது, ஒரு நூலின் இனிமையுணரவல்லாரும், ஏனைமொழிப் புலமும் உடையாருமாகிய சிலரே யெடுத்தியம்பவல்ல தனிச் சிறப்பினை எடுத்துரைக்கும் நலம் தொல்காப்பிய மேன்மை யுணர்த்திய அளவானே நன்குஅறிதலாகும். முத்தொள்ளாயிரச் செய்யுட்களின் பெருமை யெடுத்துரைத்திருக்கும் இடமொன்றே (9) செட்டியாரவர்கள்பால் எச்சிறு நூலையும் எள்ளாது பயிலும் பயிற்சியும், தாம் பயிலும் எந்நூலினும் அமைந்துகிடக்கும் நூலினிமை யோர்ச்சியாற்றலும் நன்குதெளிவிக்கும். வடமொழி தென்மொழி வல்லார் எனச் சிலர்கூறும் பிரயோக விவேக நூலாரினும் விஞ்சித் திருத்தகு சிவஞான முனிவரேயென வடமொழியிலில்லாத் தமிழ்த் தனிச் சிறப்புக்களை எடுத்துரைத்தல் இவர்களது இருமொழிப் புலமையை இனிது காட்டாநிற்கும். இங்ஙனம் செந்தமிழ்ச் சிறப்பினை எழுதிவரும் செட்டியாரவர்கள் இம்முன்னுரையிற் கூறற்குரிய ஏனைப்பொருள்களின் நினைவுடையாராக, இடமெனை நிறுத்தி விட்டிருப்பது படிப்பார்க்கு மிக்கதோர் ஏக்கத்தைத் தருவதொன்றாகும். செட்டியாரவர்கள் உழைப்புக்களெல்லாம் பெரும்பாலும் விரிவுரையின் பயத்தனவாகி, அவ்வப்போது ஆங்காங்கு இன்பஞ் செய்தலொடு போதலையன்றி, எழுத்துருவாகி, வழிவழியாக வரும் தமிழ் மக்கட்

கெல்லாம் என்றும் இன்பஞ் செய்யுமாறில்லையேயெனத் தமிழுலகம் கவல்வதுண்டு. புலவரவர்கள் தமிழ் நூலுரைகளின் பெருமைகளை யெல்லாம் வாய்ப்புழி விரித்துரைக்கும் அவாவுடையனே (10) எனுஞ் சொல்லுறுதியை மேவி, எழுத்துருவாக்கித் திங்கடோறும் இப்பொழிலை அணியுறுத்தி வருவார்களாக.

இனி, தாய்மொழி வழியாகவே கல்விப்பயிற்சி நிகழல் வேண்டும் எனும் உண்மையைச் செட்டியாரவர்கள் மிக எடுத்துரைக்கின்றனர். இவ்வெண்ணமாய பூஞ்செடி சில காலமாகவே முளைத்த விடத்திலேயே யிருக்கின்றதன்றிச் சிறிதேனும் வளரவில்லை. தமிழறியா ஆசிரியர் குழுவாம் வன்றரை-தமிழுணர்ச்சியாய ஈரத்தால் மென்றரையாங்காறும்-அது வேரூன்றி வளராதென்பதுதிண்ணம். அன்னோரே, தாமாகத் தமிழுணர்ச்சிபெற இசையார்; கல்விநெறியாளர் கட்டாயம் வந்துறுமேல் விரைந்து புகுவர். தாய்மொழிவழியாகக் கல்விபுகட்டவேண்டுமென வற்புறுத்திக் கூறிய (2, 3) செட்டியாரவர்கள், பின்னர் அவ்வழி முற்றுப்பெறற்குக் கருவியாவது தமிழ்ப்பல்கலைக்கழகமே எனக் கண்டு, “நம்அருந்தமிழ்மூலம் பல்வகைக்கலைகளையும் பயிற்றுவதற்கு நமக்கென ஒரு பல்கலைக்கழகம் இருத்தல் இன்றியமையாதது” எனக் கூறுவாராயினர்.

தமிழ் நாட்டில் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்று நிறுவப் பெறல் வேண்டுமெனுங் கிளர்ச்சி யொன்று தமிழ் மக்கள்பால் இருந்துவருகின்றது. இவ்வெண்ணம் உடையவர்கள் மிகப்பலர் என்பதிற்றடையில்லை. எனினும் இவ்வருஞ்செயல் இனிது முற்றுற முன்னின்று உழைக்கப்புக்கார் சிற்சிலரேயாகின்றனர். கனவினும் நனவினும் இதனையே எண்ணியுரைத்து, இயன்றன புரிந்துவரும் உண்மைப் பொதுநலத்தொண்டர் திருச்சிராப்பள்ளி திருவாளர் உ. க. பஞ்சரத்தினம்பிள்ளையவர்களைப் போன்றார் பலர் ஒவ்வோர் ஊர்களினும், சிறு நகரினும், பெருநகரினும் நின்று உழைத்து வருதல் வேண்டும். இங்ஙனம் தனித் தமிழ்ப் பல்கலைக்கழகம் வேண்டநேர்ந்த காரணம் இப்போதுள்ள தாய் மொழிக் கல்வியின் புறக்கணிப்பும், பாட நூல்களின் ஒழுங்கின்

மையும், பிறவுமாகும். செட்டியாரவர்கள் இவ்வுண்மைகளை யெல்லாம் விடாதுகுறித்துச் செல்வதுடன், சிறந்த தமிழறிஞர்கள் தக்க பாடநூல்களை யெழுதவும், அதனை ஏற்பிக்குமாறு அறிந்து ஏற்பிக்கவும் தூண்டுவாராகின்றனர். இச்சங்கம்போன்ற தமிழ்ச் சங்கங்கள் நடுநிலை நெறியிற் பிறழாது நின்று, பாடநூல்களை ஆய்ந்துஎண்ணங்கள் வெளியிடவேண்டுமென எடுத்துரைத்திருப்பது மிக மிகப் பொருந்துவதொன்று. இச்சங்கம், பாடநூல்களைத் தக்க புலவர்களைக்கொண்டு எழுதுவித்து வெளியிடும் எண்ணம் உளங்கொண்டுள்ளது என்பது ஈண்டு அன்பர்கள் உணரத்தக்கது.

ஆராய்ச்சி நெறியாளர் சிலர் அந்நெறியின் போக்கே தனித்தமிழ் உணர்வார்க்குத் தெரியாது என்பர். இருக்கலாம். தெரிந்த இவர்கள் இலக்கணப் பிழையில்லாத பொருள்கோளும், ஏனை நூற்களொடு முரணாத உண்மைமுடிப்புகளும்கொண்டு, தம் ஆராய்ச்சியை முடிப்பினன்றோ அவர்கள் தாம் கருதும் நன்மை புரிந்தோராவர். தமிழ்மொழியிலுள்ள அரிய நூலுரைகளையும், தமிழ்ப்புலவர், அரசர் வரலாறுகளையும் இன்ன பிறவற்றையும் ஆராய்வார், தமிழ் இலக்கண இலக்கிய உணர்ச்சிகள்-நடுத்தரமாக வாதல்-பெற்றிருத்தல்வேண்டும். வேற்றுமொழியிற் பெருங் கல்வியுடையார் இச்சிறுதகுதியைத் தம் தாய்மொழியிற் பெறுதல் அரிதா? இல்லை: புறக்கணிப்பே பொருட்டாகும். இதனையுணர்ந்த செட்டியாரவர்கள் ஆராய்ச்சியுரைகள்பற்றிக் கூறுவனவற்றை (13) இவ்வாராய்ச்சியாளர்கள் உற்றுநோக்குவார்களாக. பண்டிதமணியார் இன்செய்யுட்களின் பெருமையை எடுத்துக் காட்டியதொடு போலிச்செய்யுட்களின் தோற்றங்களையும், அவற்றால், தாய்மொழிக்கு விளையுங் கேட்டினையும் குறித்திருப்பது உற்றுநோக்குதற்குரித்து. பொய்ம்மையாளரை மெய்ம்மைகாட்டி இல்லன புனைந்து பாடும் பழக்கம் என்பெறினும் நமது தமிழ்ப் புலவர்களைச் சாராதொழியத் தமிழ்த்தாய் தண்ணருள் புரிதல் வேண்டுமென்பது செட்டியாரவர்கள் எழுதிய இப்பகுதியைப் படிக்குங்கால் நினைவில் வருகின்றது. உரைநடைத் தன்மை பற்றிச் செட்டியாரவர்கள் கூறுவதனைக் கண்டாவது இன்றியமை

யா விடங்களினன்றி வேற்றுமொழி கலவாது எழுதவேண்டுங் கடப்பாட்டினைத் தமிழ்மக்கள் அறிந்து மேற்கொள்வார்களா? தனித்தமிழ் நடையில் எழுதுவதை-எழுதமுயல்வதையே-ஒரு பிழையாகநினைக்கும் தமிழறிஞர்கள் சிலரும் இத்தமிழ் மண்ணில் இருக்கின்றார்களே! யாரேனும் தனித்தமிழ் நடையில் எழுதுவார், ஒன்றிரண்டு வேற்றுமொழிவர எழுத நேர்ந்தால், அது ஒரு பெரும் பிழையெனக்கொண்டு புறம்பழித்துத் தம்முண் மகிழும் தமிழறிஞர்சிலரும் இத்தமிழ் நாட்டிலிருந்து இதற்கோர் பொறையாகின்றனரே! இத் தகையாரெல்லாம் தம்மினுங்குறையாத வேற்றுமொழிப் பயிற்சியும், பற்றும் உடைய செட்டியாரவர்கள் கூறுவதுணர்ந்து, தம்மையும் தமதுநடையினையும் செம்மையாக்கிக் கொள்வார்களா? தமிழறிவார் நிலையே யின்னதாகத் தமிழறியார் நிலையினைக் கூறலென்? திருந்திய நடையினைப் பண்டிதர்நடை எனக் கண்மூடிக்கழறி யிகழும் பல்லோரை அவர்தம் பிழைநடை வேட்கையினின்று மீட்டுவிடவெண்ணிச் செட்டியாரவர்கள் கூறும் அறிவுரைகள் அவர்தம் செவியில் நுழைவதெங்ஙனம்? 'உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே' யன்றோ!

செட்டியாரவர்கள் ஆங்கிலம், வடமொழிகளிலிருந்து அரிய கலைகளையெல்லாம் மொழிபெயர்க்க வேண்டுமெனக் குறித்துள்ளார்கள். தமிழில், பலநூல்கள் பல்துறைகளிலும் இருந்தவுண்மை, அவற்றை 'வாரணம்'கொண்டவுண்மைகளைக் கூறியமை தவிற்ப்பனென்னை? இந்நூல்களையெல்லாம் மொழிபெயர்க்கும் தகுதியினர் பலர் நம் தமிழ்நாட்டில் ஆங்காங்குப் பிரிந்து நிற்கின்றனர். ஆங்கிலநூல்களை மொழிபெயர்க்கும் தகுதியினராய்த் தமிழும் ஆங்கிலமும் நன்குணர்ந்த திருவாளர்கள் **மாணிக்க நாயகரவர்கள், கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள்** முதலியோர் எவரேனும் ஒருவர் மேற்பார்வையில் ஆங்கில நூல் மொழிபெயர்ப்புக் கழகம் ஒன்று விரைவில் நாட்டப்பெறுதல் வேண்டும். இக்கழகத்தே ஆங்கிலம் நன்கு கற்றார் பலர் அரிய ஆங்கில நூல்களை மொழிபெயர்த்துக்கொண்டு செல்ல, தமிழ் வல்லார் பலர் அந்நூல்களை வழுவின்றிச் செம்மைசெய்துதர,

தலைவர் பார்வையிட்டு முடிக்க ஒவ்வொரு நூலும் வெளிவருதல் வேண்டும். முதற்கண் கலாசாலை, கல்லூரிகட்கு இன்றியமையாக் கலைகள் மொழிபெயர்க்கத் தொடங்கின் பொருள் வருவாய்க்கு ஒருவழியுமாகும். இம்மொழிபெயர்ப்பிற்கு இன்றியமையா முதற்பொருளை அரசியலாரே கொடுத்துதவும் கடப்பாடுடையர். தமிழ் அகராதி வேலையினும் குறைந்த நன்மை பயப்பதன்று இது. இவ்வாறன்றி, முதற்பொருள் கண்டே மொழிபெயர்ப்புக் காண்பேமெனின், அது நீத்தறிந்து நீரிலிறங்குவதனொடு ஒத்துக் காலக்கழிவின் பயத்ததாக முடியும். பொருள் வருவாய் விரிய விரிய, பொதுக்கலைகள் மொழிபெயர்த்துக் கோடலாகும். அடுத்துநிற்கும் வடமொழிக் கலைகளின் பெயர்ப்போ தக்கதோர் முதற்பொருள் கொண்டே செய்தற்குரிய தொன்றாகும். இம்மொழிபெயர்ப்பு நிகழ்தற்குரிய விடம்--வடமொழியும், அம்மொழியாளரும் நன்கு போற்றப்படும் தனவணிகர் நாடேயாகும். இம்மொழிபெயர்ப்பின் தலைவராதற்குரியார் நம் செட்டியாரவர்களேயாவர். வடமொழிவல்லார் பலர் மொழிபெயர்க்க, தமிழ்மொழிவல்லார் பலர் அதனைத் தமிழ் மொழிபெயர்ப்பாக்க, செட்டியாரவர்கள் மேற்பார்த்து முடிக்க ஒவ்வோர் நூலும் முடிவு பெறுதல்வேண்டும். செட்டியாரவர்கள் கூறுமாறு (29) அவர்கள் குலத்தினருள் ஒருவர் மனங்கொள்ளினும் இச்செயற்குப் பொருட் கவலை சிறிதும் இராது. "எம்மரபினர் புதிய முறையில் எவ்வறத்தையும் முதற்கட்டொடங்குதல் அரிது" (23) என்ற அளவில் நம்மையெல்லாம் அச்சுறுத்திய செட்டியாரவர்கள் அவ்வச்சம் கெடுதிரா வண்ணம் அடுத்தே, "அறிவாளரொருவர் தொடங்குவாராயின் அவர் முறையைப் பின்பற்றி மற்றையோரும் அந்நற்காரியத்திற் சேறலிற் பெரிதும் விரைவுமேற்கொள்வர்" எனக் கூறித் தெளிவித்திருத்தலின், இது ஒரு புதுமுறையாயிற்றே யென யாம் கவலுதற்கின்று. என்னை? மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபைத் தலைவர்களாய பெருந்திருவினர், நம் செட்டியாரவர்கள் உதவிகொடு, இம் மொழிபெயர்ப்புத்துறை யறத்தில் முன்னரே இறங்கிச் சில அரிய நூல்களை வெளியிட்டுள்ளார்களாகலின்.

புலவர்களின் புரவலராகிய செட்டியாரவர்கள் செல்வர்கள் புலவர்களைப் போற்றுதல் வேண்டுமென அச் செல்வர்கட்குப் பல்லாற்றானும் எடுத்துரைக்கின்றார்கள். (20, 21) செட்டியாரவர்கள், இங்ஙனம், செல்வர்கள் என்பாரை வேண்டுதலினும் தம் உள்ளங் குடிகொண்ட இறைவனை வேணடியிருப்பின் புலவர்கட்கு உண்மையில் நலம் விளைத்தோரும், வேண்டுகோளின் பயன் பெற்றாருமாவர். புலவர்களின் தகுதியை உள்ளவாறறிந்து அவர்களைத் தக்காங்கு மதிக்கும் செல்வர்கள் இக்காலத்து அரியராகின்றனர். செட்டியாரவர்கள் இவ்வுண்மையை உணராதவர்களுமல்லர். அதனை ஈங்குப் புலவர்கட்குக் குறிக்காதவர்களுமல்லர். செல்வத்தன்மை நிரம்பாச்செல்வர்கட்கும் அறிவுறுத்த வேண்டும் தம் கடமையைச் செய்தோரேயாவர்.

காலம் விரைந்து ஓடுகின்றது. புலவர்களும் அதனை ஒட்டி முன்னேறல் வேண்டும். புலவர்கள்பாற் றும் எளியர் என்ற எண்ணமும், செல்வர்களைபடுத்து இன்னுரைகூறி இரந்துண்ண வேண்டும் எனும் எண்ணமும் அறவே ஒழிதல் வேண்டும். புலவர்கள் வருந்தி யுழைத்துப் பெற்றதே கொண்டுவந்து வாழ்தல் வேண்டும். தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை அம்மா பெரிதென்றக மகிழல்வேண்டும் என்று பிறர்க்கு அறிவுறுஉக் கூறும் புலவர் தாம் அதனை உணர்தல் வேண்டாமா? தம்மோரன்ன கற்றறிஞரைக் காணின் உளதாகும் தம்மதிப்பினை அறவே பெயர்த்து, இவ்வுலகத்தே தம் பெருமையறியாப் பிறர் மாட்டுக் காட்டுவாராக. செட்டியாரவர்கள் கூறும் அறிவுறுஉக்களாய—" எத்துணை வறுமைநேரினும்................ ...இன்பம் நுகர்தற்கேயாம்"(20)என்னும் நல்லுரைகளைப் புலவர் ஒவ்வொருவரும் கருத்திற் பதியவைத்துக் கொள்வார்களாக.

இனி, இச்சங்கத்தின் ஆக்கங்குறித்துச் செட்டியாரவர்கள் கூறியருளிய பலவற்றையும் (28, 29) தமிழ்மக்கள் ஒவ்வொருவரும்-செல்வராக ஏனோராக-நன்கு உணர்ந்து தங்கள் தமிழ்த் தாய்க்கடனை ஆற்றிவருவார்களாக. அதுவே தமிழ்மக்கள் தம் தமிழ்நாட்டிற்குச் செய்யும் பேருதவியாகும். குறிப்புரை விரிவஞ்சி இம்மட்டில் நிறுத்தப்படுகின்றது. இதழாசிரியர்.